வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P.1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 19.07.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 201 பக்கங்கள் : 12

### அரசமைப்பின் 22ஆவது திருத்தம்

# தேர்தல் முடிவடையும் வரை வர்த்தமானி இடைநிறுத்தம்!



கொழும்பு, ஜூலை 19

**அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற 22ஆவது அரசமைப்பு திருத்தத்தை ஜனாதிபதித் தேர்தல் முடிவடையும் வரை வர்த்த மானியில் வெளியிடுவதை தவிர்க்குமாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பில் நிலவும் நிச்சயமற்ற தன்மையை நீக்கும் நோக்கில் இந்த நடவடிக்கையை தாம் எடுத்துள்ளார் என்று அமைச்சர் விஜயதாஸ தெரிவித்துள்ளார்.

22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் கடந்த 2022 ஒக்ரோபர் 21ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும், அது 21ஆம் திருத்தச் சட்டமாகவே அரசமைப்புக்குள் உள்வாங்கப்பட்டிருந்தது. 21 ஆவது திருத்தம் தொடர்பில் (11)

### அரசமைப்பு திருத்தம்:

## எந்த விடயமும் பாராளுமன்றில் இனி சமர்ப்பிக்கப்படமாட்டாது!



கொழும்பு, ஜூலை 19

எதிர்வரும் வாரங்களில் பாராளுமன்றத்தில் அரசமைப்பு திருத்தம் தொடர்பான எதுவும் சமர்ப்பிக்கப்படாது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும் என்று தெரிவித்துள்ள அவர், 19ஆவது திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளுக்கான தீர்வு தொடர்பான திருத்தங்களை தேர்தலுக்குப் பின்னர் சமர்ப்பிக்கலாம் என்றும் கூறினார்.

மேலும், தேர்தலை தாமதிக்கும் நோக்கிலேயே அரசமைப்பு திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன என்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

### மூச்சுத்திணறல் அதிகரிப்பு:

## சிறுவர்களின் முன்பாக புகைபிடிக்க வேண்டாம்!

பெற்றோருக்கு மருத்துவர் அறிவுறுத்து

கொழும்பு, ஜூலை 19

சிறுவர்களிடையே மூச்சுத்திணறல் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் சிறுவர்கள் முன்பாக புகைப்பிடிப்பதைத் தவிர்க்குமாறு பெற்றோரை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார்.

இன்புளுவன்சா போன்ற வைரஸ் தொற்றுகளைத் தொடர்ந்து மூச்சுத்திணறல் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மூச்சுத்திணறலின்போது உச்ச கட்ட ஒலி வெளிப்படுவதுடன், சுவாசப்பாதை (11)

## புலிகளின் ஆயுதங்கள் இன்னமும் புழக்கத்தில்!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூலை 19

துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த முடியாமைக்கு புலிகளின் ஆயுதங்கள் புழக்கத்தில் இருக்கின்றமையே காரணம் என்று கூறியிருக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் (11)

## தனது அமைச்சு பதவியை துறக்கிறார் விஜயதாஸ?

கொழும்பு, ஜூலை 19

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்த மாத இறுதியில் தான் வகிக்கும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு பதவியைத் துறக்கவுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வசதியாகவே அவர் தனது பதவியை துறக்கிறார் என்று சிறீலங்கா சுதந்திர கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ஷ போட்டியிடுவார் என்று அந்த கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன (11)

### ஈஸ்டர் தாக்குதல்:

## டி. ஐ. ஜி. நிலாந்தவுக்கு கட்டாய விடுமுறை!

கொழும்பு, ஜூலை 19

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பில் மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிலாந்த ஜெயவர்த்தன கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை முதல் இந்தக் கட்டாய விடுமுறை ஒழுக்காற்று விசாரணைகள் முடிவடையும் வரை தொடரும் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

முன்கூட்டியே தகவல் கிடைத்த போதிலும் தாக்குதலைத் தடுக்கத் தவறியவர்களில் நிலாந்த ஜெயவர்த்தனவும் ஒருவர் என்று குற்றச்சாட்டு உள்ளமை தெரிந்ததே. (ஐ)

## இந்தியாவை அச்சுறுத்த இலங்கை இடமளியாது!

வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜூலை 19

எமது நிலப்பரப்பையோ அல்லது கடற்பரப்பையோ இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளுக்கு எதிரான விதத்தில் மூன்றாம் தரப்பொன்று பயன்படுத்த நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கை கடலில் தரித்து நின்று ஆய்வை முன்னெடுக்க தொடர்ச்சியாக அனுமதி கோருகின்றன. இந்த நிலையில், சர்வதேச (11)



## ஞானசாரர் பிணையில் விடுவிப்பு!

கொழும்பு,ஜூலை 19

மத நல்லிணக்கத்தைக் சீர்குலைத்தார் என்ற குற்றச்சாட்டில் நான்கு வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கலகொடை அத்தே ஞானசார தேரரை பிணையில் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

கடந்த 2016 மார்ச் 30ஆம் திகதி கூரகல விகாரை தொடர்பான செய்தியாளர் (11)

## மருத்துவர் அர்ச்சுனா பேராதனைக்கு மாற்றம்!



யாழ்ப்பாணம், ஜூலை 19

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இ. அர்ச்சுனா பேராதனை போதனா மருத்துவமனைக்கு பணியிடம் மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில், நேற்று வியாழக்கிழமை சாவகச்சேரியில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

"யாழ்ப்பாண மக்களுக்காக உண்மையாக (11)

## இலஞ்சம் வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 19

கொடிகாமம் பகுதியில் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் எழுதுமட்டுவாழ் சோதனைச்சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தரே கைது செய்யப்பட்டார். இவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை சேர்ந்தவராவார். (11)

## மீனவர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 19

இன்று வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணி வரை கடல் கொந்தளிப்பாக இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், காங்கேசன்துறையில் இருந்து மன்னார் ஊடாக புத்தளம் கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகம் மணித்தியாலத்துக்கு 60 தொடக்கம் 65 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். மேலும் கடல் பகுதிகள் அவ்வப் போது மிகவும் கொந்தளிப்பாகக் (11)

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அந்தக் காலத்தில் தமிழக சஞ்சிகைகளில் பக்கத்துக்கு பக்கம் சிறிய துணுக்குகள் இருக்கும். அதில் படித்த துணுக்கு ஒன்று ஞாபகத்துக்கு வந்தது.

"உன் பையன் ஒரு ரூபாய் நாணயத்தை விழுங்கிட்டான்னு டாக்டர்கிட்ட போனியே என்ன ஆச்சு?"

"அவர் ஆயிரம் ரூபாயை விழுங்கிட்டார்."

இனி எழுதப்போவது டாக்டர்கள் சம்பந்தப்பட்டது என்பதால் இந்தத் துணுக்கை எழுதினேனே தவிர, இது டாக்டர்களை விமர்சிப்பதற்காக அல்ல.

ஏற்கனவே, பல தடவைகள் இந்த வியடம் குறித்து இந்தப் பத்தியில் பேசப்பட்டதுதான். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தைப் பற்றி பேசத் தொடங்கியபோது, சிலர் இது ரணிலை வெல்ல வைப்பதற்கான முயற்சி என்றனர். அதாவது, அவர்களை பொறுத்தவரை தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க இருக்கின்றனர் என்றும் அதனை சஜித்துக்கு கிடைக்காமல் செய்வதன் ஊடாக ரணிலுக்கு உதவி செய்யும் முயற்சி இது என்றனர். அதிலும் சிலர், ரணிலை வெல்ல வைப்பதற்காக ராஜபக்ஷக்கள் இதன் பின்னணியில்... என்றும் கதையளந்தனர்.

கனடாவிலிருந்து ஒரு பிரகிருதி, அநுரகுமாரவுக்கு கிடைக்கும் வாக்குகளை அவருக்குக் கிடைக்காமல் செய்வதற்காக ரணில் 'பெட்டி' கொடுத்து இந்த முயற்சியை தொடங்கியிருக்கிறார் என்றது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் பற்றி எந்தவித அனுமானமும் இல்லாமல் தமிழர்கள் அநுரவுக்குத்தான் வாக்களிக்க இருக்கின்றனர் என்று ஆரூடம் சொன்னார் அவர். அது அவரின் உரிமைதான். ஆனால், அதற்காக எந்த ஆதாரமும் இல்லாமல் பெட்டி வாங்கிவிட்டார்கள் என்று எதுவித தயக்கமும் இல்லாமல் பொதுவெளியில் பேசியதன் மூலம் அவர்கள் தங்களைத் தாங்களே இனங்காட்டிக் கொண்டார்கள். சிலவேளைகளில் இது போன்ற விடயங்களில் அவர்கள் ஏற்கனவே பெட்டி வாங்கி பழக்கப்பட்டவர்களோ தெரியவில்லை.

இதுபோலத்தான், இப்போதெல்லாம் எவர் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எதுவித தயக்கமும் இன்றி சொல்லலாம் என்ற நிலைமை. முன்னர் ஒரு காலத்தில் தமிழ்த் தேசியவாதிகளை யாராவது விமர்சித்தால் உடனே அவரை துரோகி என்பதுபோல, இப்போது எதற்கு எடுத்தாலும் அவர் இவரிடம் காசு வாங்கிவிட்டார் என்று சொல்வது நமக்கு பழக்கப்பட்டுவிட்ட விசயமாகிவிட்டது. அண்மையில், இந்த பொது வேட்பாளர் முடிவை ஆதரிக்கும் ஓர் அரசியல் ஆய்வாளர் கார் வாங்கியதும் - பொது வேட்பாளரை நிறுத்துவதற்காகத்தான் இந்தியா அவருக்கு பணம் கொடுத்ததாகவும் அதிலேயே அவர் கார் வாங்கினார் என்றும்கூட சிலர் எழுதினார்கள். ஆனால், இந்தியாவோ பொது வேட்பாளருக்கு ஆதரவான அரசியல் கட்சிகளை கூப்பிட்டு பொதுவேட்பாளர் பற்றி ஒன்றுக்கு பல தடவை யோசியுங்கள். யாராவது ஒரு வேட்பாளருடன் உங்கள் பிரச்னை தொடர்பாக பேசி இணக்கத்துக்கு வாருங்கள் - என்கிறது.

இவ்வாறான தகவல்களை படிக்கின்ற மக்களும் எதுவித தயக்கமும் இன்றி அதனை நம்பி விடுகின்ற போக்கு ஒன்றும் இப்போது தீர்க்கமுடியாத நோய்போல பரவத் தொடங்கி யிருக்கின்றது.

அண்மையில், சாவகச்சேரியில் பதவியேற்ற பதில் மருத்துவ அத்தியட்சகர் ஒருவர், மற்றவர்கள்மீது புகார்களை அடுக்கிவிட்டு இப்போது சங்கடப்பட்டு நிற்கிறார். கடந்த செவ்வாயன்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் தனக்கு எதிரான வழக்குகளில் ஆஜரான அந்த மருத்துவர், தான் பொதுவெளியில் முன்வைத்த அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை இப்போது ஆதாரத்துடன் பொலிஸில் முறைப்பாடாக வழங்குவதற்கு பணிக்கப்பட்டிருக்கிறார். கடந்த புதனன்று அவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மற்றைய டாக்டர்கள்மீது தான் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நிலையில் இருந்தார். அவ்வாறு அவர் அதனை சமர்ப்பிக்காவிட்டால் அவர்மீது மற்றுமொரு வழக்கை தாக்கல் செய்யலாம் என்று பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது,

ஒருவர்மீது எந்தவித ஆதாரங்களும் இல்லாமல் ஒருவர் ஒரு குற்றச்சாட்டை சொன்னால், இதுவரை அதற்கு எதிராக மானநஷ்ட வழக்கு போடப்படுவதைத்தான் நாம் கண்டிருக்கின்றோம். அவ்வாறு ஒரு மானநஷ்ட வழக்கு போட்டால் அது பல வருடங்களுக்கு நீதிமன்ற படிகளை ஏறிஇறங்க வைத்துவிடும். இதனாலேயே அப்படியான வழக்குகளை போட யாரும் விரும்புவதில்லை.

ஆனால், சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழங்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பும் இனி அதைத் தொடந்து நடக்கப் போகின்ற வழக்குகளும் இனி இதுபோல எந்த ஆதாரங்களும் இல்லாமல் ஒருவர் மீது குற்றஞ்சாட்டுபவர்களை, குற்றஞ்சாட்டுவதற்கு முன்னர் ஒன்றுக்கு பல தடவை யோசிக்க வைத்திருக்கின்றது. இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அந்த டாக்டர் பற்றி இங்கே பேச நாம் விரும்பவில்லை. தன்னிடம் வழக்குக்கு செலவிட பணம் இல்லை. தனது காரை விற்றுத்தான் அதற்கு செலவிடவிருக்கிறேன் என்று அவர் சொன்ன பின்னரும் அவரை பற்றி பேசுவது அழகாக இருக்காது. ஒரு மருத்துவ அத்தியட்சகர் - கார் ஒன்றை சொந்தமாக வைத்திருக்கும் ஒருவர். சில ஆயிரம் ரூபாய்கள் தன்னிடம் இல்லை என்கிறார். தனது வங்கிக்கணக்கு இலக்கத்தையும் பொதுவெளியில் சொல்லி வேண்டுமானால் 'செக்' பண்ணிப் பாருங்கள் என்கிறார். கணக்கு இலக்கம் தெரிந்தால் அதற்கு நாம் வேண்டுமானால் காசு போடலாமே தவிர, அந்தக் கணக்கில் எவ்வளவு இருக்கிறது என்று பார்க்கமுடியாது என்பது அவருக்கு தெரியாதது அல்ல. அவை பற்றி பேசுவது அவசியமற்றது என்பதால் அதனை விட்டுவிடுவோம். இனி இந்த வழக்கில் கிடைக்கும் தீர்ப்பு இதுபோன்று புகார்களை கூறுகின்றவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கலாம். அதற்காக டாக்டர் ஆதாரமில்லாமல்தான் புகார் செய்தார் என்ற நாம் சொல்ல வரவில்லை!

**- ஊர்க்குருவி**

சந்தேகநபர் விசாரணை காணொலி;

# பொலிஸார்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாது!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூலை 19

அத்துருகிரிய கொலை தொடர்பில் சந்தேகநபர் ஒருவரிடம் விசாரணைகள் நடைபெறுவதை காண்பிக்கும் காணொலி வெளியானமை தொடர்பில் பொலிஸாருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் கயந்த மாரப்பண தலைமையிலான குழுவினர் சந்தேகநபர் ஒருவரை விசாரணை செய்யும் காணொலி வெளியானது.

இது தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்விக்கு பதில் அளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மீண்டும் இந்தத் தவறை செய்யவேண்டாம் என்று தான் கடுமையாக எச்சரித்துள்ளார் என்றும் ஆனால், அவர்கள் மீது எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்படாது எனவும் கூறியுள்ளார்.

அத்துருகிரிய கொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் பல சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர் என்று தெரிவித்துள்ள அமைச்சர் ஊடகங்கள் உண்மை நிலவரத்தை புரிந்துகொள்ளவேண்டும் என்றும் சொன்னார். (ஐ)

வட மாகாண பளு தூக்கல்

# தெல்லிப்பழை மகாஜன கல்லூரி 9 பதக்கங்களை கைப்பற்றியது!

யாழ்ப்பாணம், ஜூலை 19

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அதிக பதக்கங்களை வென்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளது.

வடக்கு பாடசாலைகளுக்கு இடையிலான பளு தூக்கல் போட்டியை மாகாண கல்வித் திளைக்களம் நடத்தி வருகிறது. ஆண், பெண்களுக்கான இந்தப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என 9 பதக்கங்களை கைப்பற்றியது.

ஆண்களுக்கான 20 வயது பிரிவில் 102 கிலோ எடைப் பிரிவில் ஜே. ஜெனுசின், பெண்களுக்கான 17 வயது பிரிவில் 71 கிலோ எடைப் பிரிவில் ஆர். சிறீவித்தகி, 81 கிலோ எடைப் பிரிவில் எஸ். ஷனுஜா ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றனர்.

ஆண்களுக்கான 17 வயது பிரிவில் 49 கிலோ எடைப் பிரிவில் வீ. சாதுரியன், 73 கிலோ எடைப் பிரிவில் யூ. ரிஷிவன், பெண்களுக்கான 40 கிலோ எடைப் பிரிவில் ஏ. ஜெஸ்வினி வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

ஆண்களுக்கான 20 வயது பிரிவில் 55 கிலோ எடைப் பிரிவில் கே. கேதுஜன், 89 கிலோ எடைப் பிரிவில் பி. பிரகீஷ், பெண்களுக்கான 20 வயது பிரிவில் 87 கிலோ எடைப் பிரிவில் எஸ். மரியஹர்சின் ஆகியோர் வெண்கல பதக்கம் வென்றனர். (ஐ)

## சிந்தனை அமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 19

'யோகம் தரும் நல்வாழ்வு' பற்றிய சிறப்பு சிந்தனை அமர்வு நாளை சனிக்கிழமை காலை 6 மணி முதல் 8 மணிவரை நடைபெறவுள்ளது.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடை பெறும் இந்த நிகழ்வில் டாக்டர் எஸ். பாலசுப்பிர மணியம் வளவாளராக பங்கேற்பார். (ஐ)

## சுகாதார அமைச்சரின் கூட்டத்தில் இடையூறு செய்தவருக்கு பிணை!

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ்ப்பாணத்தில் சுகாதார அமைச்சர் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதானவரை 75ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் செல்ல அனுமதித்தது சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம். அத்துடன், இந்த வழக்கை எதிர் வரும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

வடக்கு மாகாணத்தின் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நடைபெற்றபோது குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் குறித்த நபர் செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் , சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய போதே அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## வாகன இறக்குமதி தொடர்பில் ஓகஸ்ட் மாதத்துக்குள் திட்டம்!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜூலை 19

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் வாகனங்களை இறக்கு மதி செய்யும் விதம் தொடர்பி லான செயல்பாடு களை ஆரம் பிக்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



அதிக மின்சார வாகனங்களை கொண்டு வருவதில் கவனம் செலுத்தி வருகிறோம். வாகனங்களை எப்படி இறக்குமதி செய்வது என்பது குறித்த ஆயத்தத்துக்கு தயாராக உள்ளோம்.

இது தொடர்பான குழுவின் அறிக்கை ஓகஸ்ட் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

## போதைப்பொருள் சார்ந்த 713 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 19

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் நடத்தப்பட்ட யுக்திய நடவடிக்கையில் போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 713 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 701 ஆண்களும் 12 பெண்களும் காணப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர்களில் 30 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 55 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 197 கிராம் 213 மில்லிகிராம் ஹெரோயின், 647 கிராம் 9 மில்லிகிராம் ஐஸ், 3 கிலோ 89 கிராம் 493 மில்லிகிராம் கஞ்சா, 10,752 கஞ்சா செடிகள் மற்றும் 440 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 19.07.2024 வெள்ளிக்கிழமை ඊළනාඩු
குரோதி வருடம், ஆடி 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒற்றுமையை காண்பிப்பதில் ஏன் தாமதம்?

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் தமிழ் மக்களின் ஒற்றுமையை காண்பிப்பதற்காகவே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் ஒற்றுமை தொடர்பில் அக்கறை காண்பிப்பதை வரவேற்கலாம். ஆனால், அந்த ஒற்றுமையைக் காண்பிப்பதில் ஏன் தொடர்ந்தும் தாமதம் காண்பிக்கப்படுகின்றது?

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் நிலைப்பாட்டை முன்னெடுத்துவரும் சிவில் சமூக அமைப்புகளின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுச் சபைக்கும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை அடிப்படையில் ஆதரிக்கும் ஏழு கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்று கைச்சாத்திடப்படுவது உறுதியானபோதும் பின்னர் அந்த உடன்பாடு இதுவரையில் கைச்சாத்திடப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் விடயங்கள் தாமதமாகி வருகின்றன என்றே 'ஈழநாடு' அறிகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் மக்களின் ஒற்றுமையை காண்பிக்கப் போவதாக சித்தார்த்தன் கூறியிருக்கின்றார். அதனை காண்பிப்பது எவ்வாறு? தர்க்கரீதியில் தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால்தான் தமிழ் கட்சிகள் ஒற்றுமையுடன் இருக்கின்றன என்பது நிரூபணமாகும். அடுத்தது, அந்த பொது வேட்பாளரை நோக்கி பெரும் அலையாக மக்களின் வாக்குகள் குவிக்கப்பட வேண்டும். இது நிகழ்ந்தால் மட்டுமே தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் இருக்கின்றனர் - ஓர் அணியாக சிந்திக்கின்றனர் என்பது நிரூபிக்கப்படும்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் பேசப்பட்ட காலத்திலிருந்து தமிழ்த் தேசிய கட்சிகள் உடனடியாக அதனுடன் தம்மை அடையாளப்படுத்துவதில் பின்னிற்பவைகளாகவே இருந்து வருகின்றன. சிவில் சமூக அமைப்புகள் தொடர்ந்தும் இந்த விடயத்தை முன்னகர்த்த முற்பட்டபோதிலும்கூட, கட்சிகள் உறுதியான ஆதரவை வழங்குவதில் தொடர்ந்தும் பின்னிற்பவைகளாகவே இருக்கின்றன - தயக்கம் காட்டுபவைகளாகவே இருக்கின்றன.

ஒரு விடயத்தில் தெளிவான நிலைப்பாடு இருக்கின்றது - அதனை முன்னெடுப்பதில் உறுதியான நிலைப்பாடு இருக்கின்றது என்றால் அதனைத் தாமதிக்க வேண்டியதில்லை. ஆனால், தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிப்பதாகக் கூறிய கட்சிகள் அனைத்துமே விடயத்தை முன்னகர்த்துவதில் அதிக ஆர்வத்தைக் காண்பிக்கவில்லை.

உண்மையில், தேர்தல் நெருங்கிவரும் நிலையில் அதிக முனைப்புடன் செயலாற்ற வேண்டியிருக்கின்றது. ஆனால், அந்த முனைப்பை கட்சிகள் மத்தியில் காணமுடியவில்லை. இதுவரையில் ஒரு கட்சிகூட, இந்த நிலைப்பாட்டை ஆதரித்து மக்களிடம் செல்ல முயற்சிக்கவில்லை.

இப்போது பிரச்னை தமிழ் மக்களின் ஒற்றுமையல்ல. மாறாக, தமிழ் கட்சிகளின் ஒற்றுமையின்மையே பிரதான பிரச்னையாகும். கட்சிகள் மத்தியில் நிலவும் ஒற்றுமையின்மையே மக்களையும் பிளந்திருக்கின்றது.

எனவே, முதலில் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு விட்டால் - அதன் பின்னர் மக்களின் ஒற்றுமைக்காக எவரும் பிரத்தியேகமாக செயலாற்ற வேண்டியதில்லை. இதனை புரிந்து கொண்டு தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை பலமானதொரு வேலைத்திட்டமாக மாற்றுவதற்கான பொறிமுறையை உருவாக்குவதில் கட்சிகள் தங்களின் அர்ப்பணிப்பையும் உறுதியையும் காண்பிக்க வேண்டும்.

# யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் டெங்கு உயர்வு

*கொழும்பு, ஜூலை 19*

யாழ்ப்பாணம் உட்பட பல மாவட்டங்களில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 30 ஆயிரத்து 663 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 12 டெங்கு மரணங்கள் பதிவாகின.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. இங்கு, 7 ஆயிரத்து 119 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், இரண்டாவது இடத்தில் யாழ்ப்பாணம் மாவட்டம் உள்ளது. 4 ஆயிரத்து 4 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கம்பஹாவில் 3 ஆயிரத்து 199, களுத்துறையில் ஆயிரத்து 690, கண்டியில் 2 ஆயிரத்து 484, குருநாகலில் ஆயிரத்து 321 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவக்கூடிய வாய்ப்பு அதிகரித்துள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# 778 கிலோ உலர் மஞ்சள் புத்தளத்தில் சிக்கியது!

*சிலாபம், ஜூலை 19*

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 778 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

புத்தளத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடடிவடிக்கையில் இந்த உலர்ந்த மஞ்சள் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசாரணைகள் நடத்தப்படுகின்றன. உலர் மஞ்சள் பொதிகள் கடற்படையினரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் பொலிஸார் ஊடாக நீதிமன்றில் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கலந்துரையாடல்

*யாழ்ப்பாணம்,ஜூலை 19*

"சமூக ஊடகங்களின் வகிபாகத்தில் எழும் கேள்விகள்" என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞான படிப்பு வட்ட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் தொடக்கவுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் விரிவுரையாளர் வேலும் மயிலும் சேந்தன், கருத்துரையை இலங்கை திறந்த பல்கலைக்கழக வெகுஜன ஊடகம் மற்றும் தொடர்பாடல் கற்கை துறையின் வருகைதரு விரிவுரையாளர் கனகநாயகம் வேல்தஞ்சன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் நடைபெறும்.

# ஈழத்தின் இயலிசை புலவர்கள் ஆராதனை விழா நல்லூரில்!

*யாழ்ப்பாணம், ஜூலை 19*

ஈழத்தின் இயலிசை புலவர்கள் ஆராதனை விழா நல்லூர் நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

குரலோசை நுண்கலைகளின் தாயகம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில், ஈழத்தில் தமிழிசை பாடல்களை உருவாக்கிய இயலிசை புலவர்கள் 27 பேரின் பாடல்கள் ஆராதனை நிகழ்வாக ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் நினைவு நாளில் நடைபெறும் இந்த ஆராதனை நிகழ்வில் யாழ்ப்பாணத்தின் முன்னணி இசைக் கலைஞர்கள் 25இற்கும் அதிகமானோர் பங்கேற்கின்றனர். இதில், 35இற்கும் அதிகமான ஈழத்தின் தமிழிசை பாடல்கள் ஆற்றுகைப்படுத்தப்படும் என்று குரலோசை நுண்கலைகளின் தாயகம் அமைப்பின் இயக்குநர் வசாவிளான் தவமைந்தன் தெரிவித்துள்ளார். (ஐ)

# பட்டிமன்றம் ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்கும் நிகழ்ச்சி சனியன்று!


*யாழ்ப்பாணம், ஜூலை*

புகழ்பெற்ற பட்டிமன்ற பேச்சாளர்களான ராஜா, பாரதி பாஸ்கர் பங்கேற்கும் விவாத நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெறுவதாக இருந்தது. சென்னையில் விமான பயணம் இரத்தானதால் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனினும், அரியாலையில் நடத்தப்படவிருந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இரவு ஏற்கனவே திட்டமிட்டவாறு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலி பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**இடபம்**

உங்களது திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும். வீடு, வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். நல்லது நடக்கும் நாள்.

**கடகம்**

மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். அதிகாரி உங்கள் புதிய முயற்சியை பாராட்டுவார்.

**சிம்மம்**

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் அதிரடிமாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தைரியம் கூடும்.

**துலாம்**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் உண்டு. புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். புதிய அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம். பொறுமைத் தேவை.

**தனுசு**

கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம்.

**மகரம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் அதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**

கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். உத்தியோகத்தில் மரியாதைக் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். மதிப்பு கூடும் நாள்.

**மீனம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். மேலதிகாரி ஆதரிப்பார்.

# தமிழ்நாடு மீனவர்களின் பாதுகாப்பு முக்கியமானது!

## மத்திய அரசாங்கத்துக்கு மதுரை உயர்நீதிமன்றம் அறிவுறுத்து

மதுரை, ஜூலை 19

"தமிழக மீனவர்களும் இந்திய குடிமக்கள்தான். தமிழக மீனவர்களின் பாதுகாப்பு முக்கியமானது" என மத்திய அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரை கிளை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 26 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசாங்கத்துக்கு உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் மோர்ப்பண்ணையைச் சேர்ந்த தீரன் முருகன் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவது, படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் 34 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி தொழில் செய்து வரும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் குற்றவாளிகள் போல கைது செய்கின்றனர். எனவே, 26 மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், ஜி. அருள்முருகன் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "தமிழக மீனவர்களும், இந்திய குடிமக்களே. அவர்களின் பாதுகாப்பு என்பது முக்கியமானது" என்றனர். மத்திய அரசு தரப்பில், "தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை தமிழகம் கொண்டு வரத் தேவையான நடவடிக் கைகளை மத்திய அரசு எடுக்கும் என இந்த நீதிமன்றம் நம்புகிறது. வழக்கு முடிக்கப்படுகிறது" என உத்தரவிட்டனர். (ஐ)

# கட்சியை மக்கள் மயப்படுத்த விஜய் நடை பயணத் திட்டம்!

சென்னை, ஜூலை 19

இந்த ஆண்டு இறுதியில் தமிழக வெற்றிக் கழக மாநாடு நடத்தப்படவுள்ளது. திருச்சி அல்லது மதுரையில் மாநாட்டை நடத்த ஆலோசனை நடைபெற்று வருகிறது. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடைபயணம் தொடங்கவுள்ளார் என்று கட்சியினர் தெரிவித்தனர்.

நடிகர் விஜய் கடந்த பெப்ரவரி மாதம் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கினார். இதனைத் தொடர்ந்து 2026 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட இலக்கு நிர்ணயித்து செயல்பட்டு வருகிறது. தற்போது, திரைப்படங்களில் நடித்து வந்தாலும் அரசியல் நகர்வுகளுக்கான அடுத்த கட்ட பணிகளை சத்தமில்லாமல் விஜய் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் மாநிலம் தழுவிய மாநாட்டை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே சமயம், தமிழகத்தில் 234 தொகுதிகளிலும் விஜய் நடைபயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருக்கிறார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. முதலில் மாநில மாநாட்டை நடத்தி முடித்த பிறகு, அடுத்தடுத்து மண்டல மாநாடு, மாவட்ட பொதுக் கூட்டங்கள், நடைபயணங்களை விஜய் திட்டமிட்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விஜயபாஸ்கருக்கு மறியல்!

கரூர், ஜூலை 19

கரூரில் ரூ.100 கோடி மதிப்பிலான நில மோசடி புகாரில் கைது செய்யப்பட்ட அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். இந்த மோசடியில் உடந்தையாக இருந்தார் என்று காவல் ஆய்வாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கரூரை சேர்ந்தவர் பிரகாஷ். இவர், தனக்கு சொந்தமான சுமார் ரூ.100 கோடி மதிப்பிலான 22 ஏக்கர் நிலத்தை அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கர், அவரது சகோதரர் சேகர், ஆதரவாளர் பிரவீன் உள்ளிட்டோர் மிரட்டி பத்திர பதிவு செய்தனரென முறைப்பாடளித்தார்.

இந்த வழக்கில் தலைமறைவான முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் கடந்த செவ்வாய்க் கிழமை கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் ஜூலை 31ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மேட்டூர் அணையில் நீர்மட்டம் 50 அடி!

மேட்டூர், ஜூலை 19

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 23,989 கன அடியாக அதிகரித்திருப்பதுடன், நீர்மட்டமும் 50 அடியை எட்டியுள்ளது.

கர்நாடகாவில் பெய்துவரும் கனமழையால் காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அங்குள்ள அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

குடிதண்ணீர் தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 1,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. (ஐ)

# பயணத்தை ஆரம்பித்தார் சசிகலா!



சென்னை, ஜூலை 19

தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தொண்டர்களையும் மக்களையும் சந்திக்க உள்ளதாக சசிகலா தெரிவித்திருந்தார்.

அதன்படி, தென்காசி மாவட்டத்தில் 4 நாட்கள் சுற்றுப்பயணத்துக்கு திட்டமிட்டுள்ள அவர் நேற்றுமுன்தினம் பயணத்தை தொடங்கினார்.

பொதுமக்கள் மத்தியில் அவர் பேசியதாவது: தி. மு. க. ஆட்சியில் அறிவிப்புகள் மட்டுமே வெளியாகின்றன. மக்களுக்கான திட்டங்கள் எதையும் செயல்படுத்தவில்லை. தேர்தலின்போது அளித்த எந்த வாக்குறுதியையும் தி. மு. க. நிறைவேற்றவில்லை.

அ. தி. மு. கவினர் அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் - என்றார். (ஐ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலை ஆதரிக்காவிடில் மொட்டு கட்சி பிளவுபடும்!

### அமைச்சர் பிரசன்ன சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 19**

**பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை எடுக்கா விட்டால் கட்சி இரண்டாக பிளவுபடும் என்று அக்கட்சி உறுப்பினரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க பக்கமே நான் நிற்கின்றேன். மொட்டு கட்சி தனி வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால்கூட ரணிலுக்கே நான் ஆதரவு வழங்குவேன். ஆனால் அவ்வாறானதொரு முடிவை கட்சி எடுத்தால் கட்சி பிளவுபடும். பெரும்பாலான உறுப்பினர்கள் ரணில் பக்கம் நிற்பார்கள்.

நாமல் ராஜபக்ஷ சிறந்த அரசியல்வாதி. சஜித், அநுரவை விட சிறந்தவர். எனினும், மொட்டு கட்சியை மக்கள் நிராகரித்துள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் அவர் களமிறங்கக்கூடாது. நாமல் களமிறங்கினாலும் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள். தேர்தலில் களமிறங்கும் நிலைப்பாட்டில் நாமலும் இல்லை.

ஜனாதிபதியின் பதவிகாலம் ஐந்தாண்டுகள்தான், ஆளுங்கட்சி நீதிமன்றத்தை நாடவில்லை. சிலவேளை அது எதிரணிகளின் சதியாகக்கூட இருக்கலாம்-என்றார். (அ)

# கழுத்து வெட்டப்பட்டு மனைவி படுகொலை!

### கணவர் தப்பியோட்டம்

கொழும்பு, ஜூலை 19

குருநாகலில் பிங்கிரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடிகமுவ பகுதியில் கணவர் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கணவரால் கழுத்து வெட்டப்பட்டு மனைவி கொலை செய்யப்பட்டுள்ளதாக பிங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கடிகமுவ பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய மனைவியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான கணவர் மது போதையில் வீட்டுக்குச் சென்று தனது மனைவியை பலமாக தாக்கியுள்ளார். இதனையடுத்து காயமடைந்த மனைவி தனது பெற்றோரின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பின்னர், மனைவி குளிப்பதற்காக தனது பெற்றோரின் வீட்டிலிருந்து கிணற்றை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது சந்தேக நபரான கணவர் தனது மனைவியின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து சந்தேக நபரான கணவர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்ட மனைவியின் சடலம் பிங்கிரிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 226 கிலோ பீடி இலை மீட்பு!

கொழும்பு, ஜூலை 19

கற்பிட்டி-குடாவ கடற்பிரதேச காட்டுப்பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒருதொகை பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்பிரதேச பகுதியில் இடம்பெற்ற விஷேட தேடுதல் நடவடிக்கையின் போதே நேற்று முன் தினம் கடற்படையினரால் கைவிடப்பட்டிருந்த நிலையில் 7 உர மூடைகளில் அடைக்கப்பட்ட 226 கிலோகிராம் பீடி இலைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினரால், கைப்பற்றப்பட்ட 226 கிலோ கிராம் பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# அடிப்படை வசதிகளின்றித் தவிக்கும் கிளிநொச்சி சாந்தபுரம் கிராம மக்கள்!

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சாந்தபுரம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் மின்சாரம், நீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சுமார் 10 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், தொடர்ச்சியாக தாம் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி பெரும் சிரமத்துக்கு முகம் கொடுத்து வருவதாக அக்கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மேலும் மின்சாரம் பெறுவது குறித்து மின்சார சபையினரை நாடியபோது அவர்கள் மின்கம்பத்தை நடுவதற்கு பணம் அறவிடப்படும் எனக் கூறியதாகவும், குறித்த பணத்தொகையை செலுத்தும் வசதி தம்மிடம் இல்லை எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, யானை, கரடி உள்ளிட்ட காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கும் தாம் நாளாந்தம் முகம்கொடுத்து வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மாணவர்களின் கல்வியும் பெரும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நீண்ட காலமாக நீடிக்கும் தங்களின் இந்த பிரச்னைகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, இவற்றுக்கு தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

### ஓமான் கடலில் கப்பல் மூழ்கியதில்

# காணாமல்போன 3 இலங்கையரில் ஒருவர் உட்பட 9 பேர் மீட்கப்பட்டனர்

கொழும்பு, ஜூலை 19

ஓமான் கடற்பிராந்தியத்தில் எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதில் காணாமல் போயிருந்த 16 பேரில் 9 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்திய கடற்படைக்குச் சொந்தமான யுத்த கப்பல் மூலம் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 9 பேரில் ஒருவர் இலங்கையை சேர்ந்தவர் என்பதுடன் எஞ்சிய 8 பேரும் இந்திய பிரஜைகள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காணாமல் போனோரை மீட்பதற்காக இந்திய கடற்படையின் விமானமும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

ஓமான் கடற்பிராந்தியத்தில் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று மூழ்கி விபத்திற்குள்ளானதில் இலங்கையர்கள் மூவர் உள்ளிட்ட 16 பேர் காணாமல் போயிருந்தனர்.

கொமொரஸ் நாட்டு கொடியுடன் பயணித்த குறித்த கப்பல், யேமன் துறைமுகமான ஏடனிலிருந்து ஓமானின் முக்கிய தொழில்துறை துறைமுகமான டுக்மில் பகுதியில் வைத்து கவிழ்ந்ததாக சர்வதேச செய்திகள் தெரிவித்திருந்தன.

ஓமான் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துடன் தொடர்பு கொண்டு காணாமல்போன 3 இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதாக கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார். (அ)

# அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்ப ஆய்வு ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 19

அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஆராயும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் கீழ் 475,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை கடந்த 13ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

அஸ்வெசும முதலாம் கட்டத்தின் கீழ் 34 இலட்சம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவர்களிர் 18 இலட்சம் பேர் அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்ள தகுதி பெற்றவர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய 16 இலட்சம் பேரின் விண்ணப்பங்களும் சமூக பாதுகாப்பு தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சியில் 9,091 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பு!

கிளிநொச்சி, ஜூலை 19

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய பசளைக்கான பணம் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் பா.தேவரதன் இதனைத் தெரிவித்தார்.

இதுவரை 9,091 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பசளை மானியத்துக்கான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஏனையவர்களுக்குக் கட்டம் கட்டமாக வங்கிக் கணக்குகளில் பணம் வைப்பிலிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# திருத்தங்கள் வேண்டாம் தேர்தலை நடத்துங்கள்!

### சம்பிக்க ரணவக்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

அரசியலமைப்பு திருத்தங்கள் அல்ல, ஜனாதிபதி தேர்தலை நடத்துவதே இந்த தருணத்தில் நாட்டிற்கு தேவையாகும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற "நாட்டுக்கு ஒருமித்த படி" நடைமுறை நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கம் அடங்கிய துண்டுப் பிரசுர விநியோகம் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்னை 2028ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரணவக்க, 2028ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரசாங்கத்திற்கு கடனை செலுத்துவதற்கான வேலைத்திட்டம் தேவை எனக் கூறினார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தை குடியரசு முன்னணி முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கமறியல் கைதிகளுக்கும் வாக்களிக்க வாய்ப்பு வேண்டும்!

## உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

கொழும்பு, ஜுலை 19

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் வாக்களிப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அது தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்க, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவைப் பிறப்பிக்குமாறு, அந்த மனுவின் ஊடாக கோரப்பட்டுள்ளது.

விளக்கமறியலில் உள்ள ஒருவர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட 9 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் கீழ், நபர் ஒருவர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் வரை நிரபராதி என்ற அடிப்படையில், அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் அனுபவிக்க அவருக்கு உரிமை உண்டு என மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்குத் தேர்தல்களில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டிய மனுதாரர், அவர்கள் தமது ஜனநாயக உரிமையை இழந்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிட்டார்.

(அ)



# புதிய மீன்பிடி சட்டத்துக்கு எதிராக சுவரொட்டிகள்!

மன்னார், ஜுலை 19

அரசினால் உருவாக்கப்பட்ட புதிய மீனவச் சட்ட வரைப்புக்கெதிராக நேற்று முன் தினம் புதன்கிழமை மன்னார் நகர பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

மீனவ அமைப்புக்களின் ஒன்றியம் எனும் பெயரில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் அமைப்பினரால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இந்த சுவரொட்டியில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் அனைவரினதும் வயிற்றில் அடிக்கும் புதிய மீன்பிடிச் சட்டத்தை தோற்கடிப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஐக்கிய தேசிய கட்சியுடன் கருணா விசேட சந்திப்பு

கொழும்பு, ஜுலை 19

கருணா அம்மான் தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கும் ஐ.தே.கட்சியின் முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவம்சம் தலைமையிலான குழுவினருக்கும் இடையே விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 3 மணியளவில் சிறிகோத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை நிர்வாகக் குழுவின் அழைப்பை ஏற்று, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கருணா அம்மான் தலைமையில், உபதலைவர் ஜெயா சரவணா மற்றும் செயலாளர் செந்தூரன் ஆகியோர், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசத்துடன் முக்கிய கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வரவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான பல்வேறு திட்டங்கள் தொடர்பாக விரிவாக பேசப்பட்டதாக தெரியவருகிறது.

(அ)

# வெளிநாடு அனுப்புவதாக பணம் மோசடி; பல்கலை அலுவலர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 19

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பல்வேறு நபர்களிடம் இருந்து சுமார் 06 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தை பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் கிழக்கு பல்கலைக்கழக அலுவலர் ஒருவர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலரை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி பெரும் மோசடி ஒன்று நடைபெற்ற நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் .

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பெண்ணொருவரை கைது செய்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரை வழிநடத்தி மோசடிகளில் ஈடுபட்ட கிழக்கு பல்கலைக்கழகத்தின் அலுவலர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, முன்னதாக கைது செய்யப்பட்ட இளம் பெண், பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்ற சுமார் 6 கோடி ரூபாய்க்கும் அதிகமான பணத்தை பல்கலைக்கழக அலுவலரின் வங்கி கணக்கில் வைப்பிலிட்டுள்ளமையும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# போதைப்பொருளுடன் ஐவர் கைது

கொழும்பு, ஜுலை 19

குருநாகல், மெல்சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண் உட்பட ஐந்து பேர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக மெல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

மெல்சிறிபுர பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த மூன்று ஓட்டோக்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொரளை, பன்னியத்த மற்றும் தம்புள்ளை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 20, 23, 27 மற்றும் 29 வயதுடைய நான்கு நபர்களும் பொரள்ளை பகுதியில் வசிக்கும் 19 வயதுடைய பெண்ணொருவருமே கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 49 கிராம் 1,350 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

(அ)

# நீர்க் கட்டணமும் குறைக்கப்படும்!

## ஜீவன் தொண்டமான் நம்பிக்கை

கொழும்பு, ஜுலை 19

புதிய மின் கட்டணத் திருத்தத்திற்கு இணையாக நீர்க் கட்டணத்தை குறைப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாக நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அதுகுறித்து இந்த வாரத்துக்குள் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், மாதாந்தம் 2.8 பில்லியன் ரூபாய் நட்டத்தைச் சந்தித்த நீர் வழங்கல் சபையினால் தற்போது 6.2 பில்லியன் ரூபாய் இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், வட்டி விகிதங்கள் 26 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் குறைந்துள்ளதால் அதனையும் கருத்தில் கொண்டு டொலரின் பெறுமதியின் அடிப்படையில் நீர்க் கட்டணத்தை குறைப்பது குறித்து ஆராயப்படுகிறது என்றார்.

இதன்படி, இந்த வாரத்திற்குள் நீர்க் கட்டணத்தை எந்தளவு குறைக்கலாம் என்பது குறித்த தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் நம்பிக்கை வெளியிட்டார்.

(அ)

# நாட்டுக்குத் திரும்பியவரை கடத்தி கப்பம் பெற முயற்சி

## 4 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜுலை

குவைத்தில் பணிபுரிந்து விட்டு இலங்கை திரும்பிய ஒருவரை மாவத்தகமவில் இருந்து கடத்திச் சென்று நாரம்மல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் அடைத்து வைத்திருந்த நான்கு சந்தேக நபர்களை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் குவைத்தில் பணிபுரிந்தபோது, அதே இடத்தில் பணிபுரிந்த மற்றுமொருவரின் உதவியின் மூலம் இந்த கடத்தல் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஒரு கோடி ரூபாய் கப்பம் பெறுவதற்காக இந்த கடத்தல் நடந்துள்ளது.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த நபர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நாரம்மல மற்றும் கட்டுபொத பிரதேசங்களில் வசிக்கும் 31-39 வயதுடையவர்கள் என்பதுடன், குறித்த நபரை கடத்த பயன்படுத்திய கெப் வண்டியும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மாவத்தகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. பயணித்த வாகனம் விபத்து!

கொழும்பு, ஜுலை 19

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க பயணித்த ஜீப், ஜாவத்தை வீதியில் விபத்துக்குள்ளாகியுள்ளதாக நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 3 பேர் காயமடைந்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினரின் ஜீப்பும், காரும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்களில் காரின் சாரதி மற்றும் பயணி ஒருவரும் அடங்குவதாகவும், மூவரும் நாரஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதிய ஒப்பந்தத்தில் நியாயமான மாற்றம் நடக்கும்

## கூறுகிறார் கலாநிதி ஹர்ஷ டி சில்வா

கொழும்பு, ஜூலை 19

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டுள்ள சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்க மையவே எமக்கும் செயற்படவேண்டியேற்படும். அவ்வா றில்லை எனில் மீண்டும் சிக்கல்களை எதிர்கொள்ள நேரி டும். எவ்வாறிருப்பினும் அந்த இணக்கப்பாட்டில் நியாயமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் என்ற யதார்த்தமான வாக் குறுதியை மக்களுக்கு வழங்குவதாக பாராளுமன்ற உறுப் பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**



அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்துள்ளமையால் 26 சதவீதமான மக்கள் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்கம் குறைவடைந்துள்ளதாக சிலர் கூறுகின்றனர். பணவீக்கம் குறைவடைதல் என்பது பொருட்களின் விலை அதிகரிக்கும் வேகம் குறைவடைவதாகும். மாறாக பொருட்களின் விலை குறைவடைவதைக் குறிக்காது. மறுபுறம் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு பதிலாக அவற்றின் எடை குறைக்கப்பட்டுள்ளது.

நடுத்தர மக்கள் 79 சதவீதமானோர் கடந்த காலத்தை விட தற்போது சந்தோசமாக வாழவில்லை என்றும் அந்த ஆய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கு தீர்வு காண்பதற்கு அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும். நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்துக்கமைய எவ்வாறு இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். அதிக வருமானம் பெறுவோருக்கான வருமான வரியை தற்காலிகமாக அதிகரித்து, ஏனையோருக்கு நிவாரணங்களை வழங்க முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் அனைவரும் நியாயமான வரி சலுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். நாம் யதார்த்தமான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளோம்-என்றார்.

(அ)

# 350 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 19

யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை, இணைந்து நடத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு கொடையாளர் சதா.மங்களேஸ்வரன், கலாநிதி ஆறு.திருமுருகனின் வேண்டு கோளுக்கு இணங்க (அபயம் அறக்கட்டளை ஊடாக) வழங்கிய 350 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் மேற்படி ஸ்கான் இயந்திரம் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ்.மருத்துவ பீட மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், தாதியர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவ பீடம், வைத்தியர்கள், சிவபூமி அறக்கட்டளை நிலைய கொடையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(அ)



# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது!

## விஜித ஹேரத் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க தற்போது சந்தர்ப்பங்கள் எதுவும் இல்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித் ஹேரத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஒவ்வொரு நபர்களை அனுப்பி நீதிமன்றில் வழக்கு பதிவு செய்தார்கள்.

அரசியல் யாப்பின் 83 (அ) சரத்து தொடர்பில் கருத்துக்கள் எழுந்தன.

83 (அ) சரத்து திருத்த நாடாளுமன்றத்தில் 2\3 பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்வது அவசியம்.

ஜனாதிபதி மூலம் 30 நாடகளுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்கு அழைக்கப்பட வேண்டும்.

அதற்கு, அரசியல் யாப்பின் 22 ஆவது திருத்தத்தை முன்வைத்து நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் 2\3 பெரும்பான்மை அவசியமாகும்.

22 ஆவது திருத்தத்துக்கான அரச வர்த்தமானியை நாடாளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு போதிய கால அவகாசம் இல்லை.

அதனை சமர்ப்பிக்கும் போது ரணில் தோல்வியடைந்திருப்பார்-என்றார்.

(அ)

# 22ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் 30 நாள்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பு!

## சுட்டிக்காட்டுகிறார் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, ஜூலை 19

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும். ஒருவேளை திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் 30 நாட்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல நேரிடும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் பதவி காலம் மற்றும் பாராளுமன்றத்தின் பதவி காலம் குறித்து அரசியலமைப்பின் 30(3) உப பிரிவு மற்றும் 62(2) உப பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு உறுப்புரைகளும் அரசியலமைப்பின் 83(ஆ) உறுப்புரையுடன் முரணாக காணப்படுவதால் இதனை திருத்தம் செய்வதாக குறிப்பிட்டுக் கொண்டு அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இல்லாத சிக்கல்களை தோற்றுவிக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும். ஒருவேளை இந்த திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் 30 நாட்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும்.

22 ஆவது திருத்தத்தை அவசர சட்டமாக பாராளுமன்றத்தில் முன்வைக்க முடியாது என அரசியலமைப்பின் 122 (3) உப பிரிவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையிலும் இன்னும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தலுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது. தேர்தல்கள் ஆணைக்குழு இன்னும் 13 நாட்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# வற் வரியில் 20 வீதத்தை வசூலிக்க முடியாதநிலை!

கொழும்பு, ஜூலை 19

பெறுமதி சேர் வரி தொடர்பான வருவாயில் சுமார் 20 வீதம் வசூலிக்க முடியாத அபாயத்தில் உள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வினைத்திறனற்ற மற்றும் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்திற்கு வசூலிக்கப்பட வேண்டிய ஆனால் இது வரை அறவிடப்படாத வெட் வரி தொடர்பில் விசேட கணக்காய்வு அறிக்கையை வெளியிடும் போதே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் பராமரிக்கப்படும் ஆவணங்களின்படி,

டிசெம்பர் 31, 2022 நிலவரப்படி, வற் வரி நிலுவைத் தொகை மற்றும் அந்த நிலுவைகளுக்கு விதிக்கப்பட்ட அபராதங்களின் மதிப்பு 369 பில்லியன் ரூபாயாகும். இதில் 255 பில்லியன் ரூபாய் நிலுவைத் தொகை பல்வேறு காரணங்களுக்காக வசூலிப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டுகிறது.

மீளப்பெறக்கூடியதாக இனங் காணப்பட்டுள்ள 114 பில்லியன் ரூபா வரி நிலுவைத் தொகை 13 வருட காலத்துக்கு நிலுவையில் உள்ளதாகவும் கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது.

இதன்படி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அறவிடப்படவேண்டிய வற் வரி உரிய காலத்தில் வசூலிக்கப்படாததால் பொதுமக்கள் ஏற்கனவே தியாகம் செய்து அரசாங்கத்திற்கு வருமானமாக செலுத்திய வரியில் பெருமளவிலான வருமானம் தவறாகப் பயன்படுத்தப்படுத்தல் அல்லது அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

(அ)

# நண்பிக்கு பணம் கொடுத்து ஏமாந்தவர் உயிர் மாய்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 19

தனது நண்பிக்காக வங்கியில் இருந்து கடனாகப் பெற்று கொடுத்த பணத்தை மீளப் பெற முடியாமையினால் மனமுடைந்த குடும்பப் பெண் தனது உயிரை மாய்த்துக் கொண்டார்.

யாழ்ப்பாணம், அல்வாய் பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்துள்ளார்.

உறவு முறையான இரு பெண்களுக்கு இடையில் நீண்ட கால நட்பு இருந்து வந்துள்ளது. அதில் ஒரு பெண் பண கஷ்டத்தில் இருந்தபோது மற்றைய பெண் வங்கியில் பெருந்தொகைப் பணத்தைக் கடனாக பெற்று, தனது நண்பிக்கு பண உதவி செய்துள்ளார்.

பண உதவியை பெற்றுக் கொண்ட பெண், பணத்தை மீளச் செலுத்தாத நிலையில், வங்கியில் கடன் பெற்ற பெண் பண நெருக்கடிக்குள்ளாகி மன வுளைச்சலில் காணப்பட்டார்.

இந்நிலையில் அவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி ஒதுக்கிய நிதி மக்களுக்கே தவிர எம்.பிக்களின் சொந்தப் பாவனைக்கு அல்ல!

## ஹரீஸ் எம்.பி. சுட்டிக்காட்டு

அம்பாறை, ஜூலை 19

இந்த நாட்டில் ஒரு எதிர்க்கட்சியில் இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர் நான். பாராளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும், வடகிழக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தி விடயங்களையும் அவருக்கு விளக்கினேன். அவற்றை பற்றி உணர்ந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு சேவை செய்ய எனக்கு நிதியினை வழங்கியிருக்கிறார். அதை கொண்டு பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள், பிரதேச உட்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறேன். இந்த நிதி எனது சொந்த தேவைகளுக்கு தரப்பட்டதல்ல. எனது பிரதேச அபிவிருத்தி பணிகளுக்கு தரப்பட்டவை. இதனைக் கண்டு பல அரசியல்வாதிகள் பொறாமை கொள்கிறார்கள். எனக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அரசியல்வாதிகள் சிலர் கேள்வி எழுப்ப தொடங்கி விட்டார்கள் என முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர்-

நான் படிக்கும் காலங்களில் பல்கலைக்கழகம் என்பதும் பட்டங்கள் பெறுவது என்பதும் பல மாணவர்களுக்கு எட்டாக்கனியாக இருந்தது. ஒரு காலத்தில் உயர்தர பரீட்சையில் போதியளவு சித்தியடையாதுவிட்டால் அல்லது பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டால் கூலி தொழிலுக்கு செல்கின்ற காலம் இருந்தது.

ஆனால் இப்போது இருக்கின்ற அரசாங்கத்தினதும், எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் கல்விக் கொள்கையானது உயர்தரத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டாலும் அந்த மாணவன் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று மேற்படிப்பை பூர்த்தி செய்யக்கூடிய வழிவகைகள் அத்தனையும் செய்து



கொடுக்கப்பட்டுள்ளது. தனது பட்டப்படிப்பை மேற்கொள்ள போதியளவு பணம் இல்லாதவர்களும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இன்று ரணில் விக்கிரமசிங்க வங்கிகளூடாக உருவாக்கி உள்ளார்.

இளைஞர், யுவதிகளுக்கான வாய்ப்புகள் இலங்கையில் பரந்து கிடக்கின்றது. ஒவ்வொருவரும் தமக்கு பிடித்த துறைகளில் மேற்படிப்புகளை கற்றுக் கொள்ளலாம். எல்லாத்துறைகளிலும் இப்போது நிறைய சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன. அண்மையில் அம்பானி வீட்டில் பாட்டுப்பாடியவரே சில நிமிடங்களுக்கு பல கோடி ரூபாய்களை சம்பளமாக பெற்றுள்ளார். தற்போது பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் நானும் உயர்தரத்தில் கலைத் துறையில் படித்தவன். பின்னர் பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் கற்று இப்போது நான் சட்டத்தரணியாக இருக்கிறேன்.

துரதிஷ்டவசமாக பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் மூலமாக நான் அரசியலுக்குள் நுழைந்தேன். எனவே நீங்களும் உங்களுக்கு பிடித்த துறையை படித்து அதில் ஒரு நல்ல இடத்தை பெற்றுக் கொள்ளுங்கள். நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க அவர்கள் ஒரு கல்விமான் என்பதனால் அவருக்கு கல்வியின் அவசியம் தெரிகிறது. அதனால் கல்வியை மேம்படுத்த இவ்வாறான வேலைத்திட்டங்களை செய்கிறார்.

நீங்களும் உங்களுக்கு விருப்பமான துறையை தெரிவு செய்து அதில் முழு கவனத்தையும் செலுத்தினால் அது அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும்-என்றார். (அ)

ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம்

# 1,112 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கல்

அம்பாறை, ஜூலை 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கு அமைய கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருளாதார பின்னடைவை எதிர்நோக்குகின்ற திறமையுடைய 100000 மாணவர்களுக்கும் க.பொ.த உயர்தர மாணவர்கள் 6000 பேருக்கும் புலமைப் பரிசில் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு இணையாக நடைபெறும் அம்பாறை மாவட்ட புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் அக்கரைப்பற்று ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அரங்கத்தில் நேற்று முன் தினம் இரண்டு கட்டங்களாக இடம்பெற்றது.

இதற்கமைய காலை ஒரு அமர்வு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன் தலைமையிலும் நண்பகல் மற்றுமொரு அமர்வு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையிலும் இரு பிரிவுகளாக சிறப்பாக நடைபெற்றன.

அபிவிருத்தி லொத்தர் சபையின் அனுசரணையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதா வுல்லாஹ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உள்ளிட்டோர் பிரதம அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இந் நிகழ்வில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதிகள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கல்வியதிகாரிகள் மற்றும் மாணவர்கள், மாணவர்களது பெற்றோர் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில், கல்வி வலயத் திற்குட்பட்ட பொருளாதார பின்னடைவை எதிர்நோக்குகின்ற திறமையுடைய 872 தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கும் க.பொ.த உயர்தர மாணவர்கள் 240 பேருக்கும் அதிதிகளினால் புலமைப்பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)






# கல்லரிப்பு பழங்குடி மாணவர்களுக்கு கல்வி வழங்க வாகன வசதி ஏற்பாடு!

மட்டக்களப்பு, ஜூலை 19

வாகரை பிரதேசத்தில் உள்ள வெருகல் கல்லரிப்பு பழங்குடிக் கிராம மாணவர்களுக்கு கல்வி வசதி வழங்க வள்ளுவம் அமைப்பு முன்வந்துள்ளது.

கல்லரிப்பு பழங்குடி கிராமத்தில் பாடசாலை இல்லை. மூன்று கிலோமீற்றர் தொலைவில் மாவடிச்சேனை மற்றும் வெருகல் பாடசாலைகள் உள்ளன. இம் மாணவர்கள் அங்கு சென்று தான் கல்வி பயில வேண்டிய நிலை உள்ளது.

அதனால் அங்குள்ள மாணவர்கள் மாதக்கணக்கில் பாடசாலைக்கு செல்லாமல் இருந்து வந்தனர்.

இந்த நிலையை உணர்ந்த வள்ளுவம் அமைப்பு தினமும் காலையில் அம் மாணவர்களை மாவடிச்சேனை பாடசாலைக்கு கொண்டு செல்ல வாகன வசதியை வழங்கி உள்ளது. அதே போன்று பாடசாலை முடிந்ததும் அவர்களை கிராமத்தில் கொண்டு செல்லவும் அந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பல மாத காலமாக பாடசாலை செல்லாதிருந்த அந்த மாணவர்களுக்கு வள்ளுவம் அமைப்பு ஏற்படுத்தி கொடுத்த இந்த வாகன வசதி அவர்களுக்கு கல்வி வாசனையை மீண்டும் ஊட்ட வாய்ப்பு அளித்துள்ளது. (அ)

# பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவுக்கு புகையூட்டும் இயந்திரங்கள் கையளிப்பு

அம்பாறை, ஜூலை 19

உலக வங்கியின் நிதி உதவியின் மூலம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டத்தின் ஊடாக கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களுக்கு தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் கீழ் உள்ள பூச்சியல் ஆய்வு கூடத்தில் அவசியத் தேவையாக காணப்பட்ட புகையூட்டும் இயந்திரங்கள் நேற்று முன் தினம் புதன்கிழமை அந்தப் பிரிவிற்கு வழங்கி வைக்கப்பட்டன.



குறித்த புகையூட்டும் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ.எம். பஸால் பணிப்பாளரிடமிருந்து குறித்த இயந்திரத்தினைப் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ். ஷாபி, உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம். இப்ஹாம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# ஆசிய ஆடவர் மல்யுத்த போட்டியில் மட்டக்களப்பு சிவானந்த மாணவன்

மட்டக்களப்பு, ஜூலை 19

தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆசிய ஆடவர் மல்யுத்த சம்பியன்சிப் போட்டியில், மட்டக்களப்பு சிவானந்த தேசியப் பாடசாலை மாணவன் கிருஷ்ணகுமார் ஹரி பிரசாத் பங்கொள்ளவுள்ளார்.

20 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டியில் இவர் பங்கெடுக்கவுள்ளார்.

தாய்லாந்திற்கு பயணமாக முன்னர், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரை இன்று சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஜதிஸ்குமார் மற்றும் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி. வாசுதேவன் ஆகியோரும் மாணவனிற்கு தமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோ பைடனுக்கு கோவிட் தொற்று



## கடற்கரை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டார்

நியூயோர்க், ஜுலை 19

**அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.**

**இந்நிலையில், சுகவீனம் காரணமாக நேற்று நடைபெறவிருந்த அரசியல் பிரச்சாரக் கூட்டத்தையும் அவர் இரத்து செய்துள்ளார்.**

நோய் அறிகுறி தென்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவருக்கு கோவிட் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், சிகிச்சைப் பெற்றுவரும் அவர், டெலாவேரின் ரெஹோபோத்தில் உள்ள அவரது கடற்கரை வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நெருங்கிவரும் நிலையில், கடும் தேர்தல் பிரச்சார கூட்டங்களை நடத்தி வருகின்றார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி பைடன் நேர்மறை சோதனை செய்துக்கொண்டதாக வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரீன் ஜீன்-பியர் கூறினார்.

தனிப்படுத்தப்பட்டுள்ள நேரத்தில் தனது அனைத்து கடமைகளையும் முழுமையாகச் செய்வார்" என்றும் ஜீன்-பியர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பைடன் பாக்ஸ்லோவிட் என்ற கோவிட் மருந்தைப் பெற்றுள்ளதாகவும், தனது முதல் டோஸை எடுத்துவிட்டார் என்றும் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அவரது அறிகுறிகள் லேசானவை, அவரது சுவாச விகிதம் இயல்பானது, அவரது வெப்பநிலை இயல்பானது என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

(அ)

# தாய்லாந்து விடுதியில் ஒரே நேரத்தில் பலர் மர்மமான முறையில் உயிரிழப்பு



பாங்கொக், ஜுலை 19

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் பிரபலமான சொகுசு விடுதியொன்றில் 6 பேர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர்.

இறந்தவர்களில் ஒருவர், மற்றவர்களை விஷம் குடிக்க வைத்ததன் பின்னணியிலிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பயன்படுத்திய தேநீர் கோப்பையில், சயனைட் (விஷம்) காணப்பட்டதுடன், அதனை உட்கொண்டதால் இந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அந்நாட்டு பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும் விஷம் வைத்தவர் கடனினால் பாதிக்கப்பட்டவர் என்றும் அந்நாட்டுக் காவல்துறையினரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அந்நாட்டுக் காவல்துறையினரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# வடகொரிய தூதரக அதிகாரி தென்கொரியாவில் தஞ்சம்!

சியோல், ஜுலை 19

வடகொரிய தூதரக அதிகாரி ரி இல் கியூ தனது குடும்பத்துடன் தென்கொரியாவில் தஞ்சமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கியூபாவில் வடகொரியாவுக்கான தூதரக அதிகாரியாக இருந்தவர் ரி இல் கியூ. இவர் வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் தந்தையும், சர்வாதிகாரியுமான கிம் ஜாங் இல்லின் அரசாங்கத்தில் அதிகாரியாக பணியாற்றினார்.

இந்த நிலையில் ரி இல் கியூ தனது மனைவி, குழந்தைகளுடன் தென்கொரியாவில் தஞ்சமடைந்ததாக கூறப்பட்டு வந்தது. இதனை தென்கொரிய உளவு நிறுவனம் தற்போது



உறுதிப்படுத்திள்ளது. முன்னதாக கடந்த 2016 இல் லண்டனில் பணியாற்றிய வடகொரிய தூதுவர் டே யோங்ஹோ தென்கொரியா தப்பிச்சென்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் வடகொரியாவின் மோசமான அரசியல் சூழ்நிலை தெளிவாகி இருப்பதாக தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(எ)

# எனது வளர்ச்சிக்கு மனைவியே காரணம்

## அமெ. துணை ஜனாதிபதி வேட்பாளர்

வாஷிங்டன், ஜுலை 19

"என் வளர்ச்சிக்கு என் மனைவியே முக்கிய காரணம்" என்று குடியரசு கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட ஜேம்ஸ் டேவிட் வான்ஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பைடனும் குடியரசுக் கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில், ட்ரம்ப் தன் கட்சி சார்பில் துணை ஜனாதிபதி வேட்பாளராக அமெரிக்க செனட்டர் ஜேம்ஸ் டேவிட்




வான்ஸை தெரிவு செய்துள்ளார்.

வான்ஸின் மனைவி உஷா சிலுகுரி இந்திய வம்சாவளி ஆவார். ஜோ பைடன் அரசின் துணை ஜனாதிபதியாக இருக்கும் கமலா ஹரீஸ் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்.

சட்டத்தரணியாகவுள்ள தன் மனைவி உஷா குறித்து டேவிட் வான்ஸ் கூறுகையில், "என் வளர்ச்சிக்கு என் மனைவியே முக்கிய காரணம். என் பணியிலும் ஆன்மிகப் பயணத்திலும் என்னை நான் உணர அவர் எனக்கு உறுதுணையாக இருந்துள்ளார்" - என்றார்.

(எ)


# சீன பெண்கள் குடும்ப கட்டுப்பாடு செய்யாவிட்டால் வேலை இல்லை!

## புதிய சட்டத்தால் பெரும் சிக்கல்

பீஜிங், ஜுலை 19

சீனா - ஜிங்சு மாகாணத்தில் தனியார் நிறுவனங்களில் விதிக்கப்பட்டுள்ள புதிய சட்டத்தால் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

குறித்த தனியார் நிறுவனத்தில் பிரசவ கால விடுமுறையைத் தவிர்ப்பதற்காக வேலையாட்களை தேர்வு செய்யும் போது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.



இதனடிப்படையில், பெண்கள் தான் இந்த பரிசோதனைக்கு பெரிதும் உட்படுத்தப்படுகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனோடு தொடர்புடைய நேர்காணலின் போது முழு உடற் பரிசோதனையும் கர்ப்ப கால பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகின்றது.

பரிசோதனையின் முடிவில் பெண்கள் கர்ப்பமாக இருப்பது தெரிந்தால் அவர்களுக்கு வேலை கிடையாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நேர்காணலில் குடும்ப கட்டுப்பாடு தொடர்பாகவும் கேள்விகள் கேட்க்கப்படுவதாகவும் ஏற்கனவே குழந்தைகள் இருக்கும் பட்சத்தில் கண்டிப்பாக குடும்பக்கட்டுப்பாடு செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த செய்தி வெளியானதிலிருந்து அதற்கு எதிராக பல சமூக ஆர்வலர்கள் தங்களின் எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருவதோடு பெண் சுதந்திரம் தொடர்பாகவும் தங்களின் கருத்துக்களை பகிர்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ட்ரம்ப் மீதான சூடு: ஈரான் காரணமா?




நியூயோர்க், ஜுலை 19

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொலை செய்வதற்கு ஈரான் சதித் திட்டம் தீட்டியதாக வெளியான அமெரிக்க ஊடகச் செய்திகளை ஈரான் முற்றிலும் நிராகரித்துள்ளது.

குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிரங்கவுள்ள முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி மீது தாக்குதல் மேற்கொள்ள சதித் திட்டம் தீட்டியதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை ஈரான் நிராகரிப்பதாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டில் மூத்த இராணுவ அதிகாரி காசிம் சுலைமானியைக் கொல்ல உத்தரவிட்டதில் டிரம்பின் பங்கிற்காக ஈரான் விசாரணை மேற்கொள்வதில் உறுதியாக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான கூற்றுக்களை அரசியல் நோக்கமாக கருதுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஈரான் நாட்டின் மூத்த இராணுவ அதிகாரி காசிம் சுலைமானி கடந்த 2020 ஆம் ஆண்டில் ஆளில்லா விமானம் கொண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தார்.

இதன்பின்னர் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்ப் மற்றும் முன்னாள் வெளியுறவு செயலாளர் மைக் பாம்பியோ உள்ளிட்டோருக்கு ஈரானிலிருந்து கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டன.

பென்சில்வேனியா மாகாணம் பட்லர் நகரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஈடுபட்ருந்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ட்ரம்ப் காயமடைந்ததுடன் மேலும் ஒருவர் உயிரிழந்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஆணைக்குழுவின் தேவைக்கு ஏற்ப தேர்தலுக்கு நிதி ஒதுக்க நிதியமைச்சு தயார்!

## அமைச்சர் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதியமைச்சுக்கு பணத்தை ஒதுக்கும் திறன் உள்ளதாகவும், தேவைக்கு ஏற்ப பணத்தை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.**



2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்படி, எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கம் கடுமையான நிதி முகாமைத்துவத்துடன் செயற்படுவதால், அந்தப் பணத்தை வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை என்றும் அமைச்சர் கூறினார்.

தபால், அச்சிடுதல் மற்றும் பாதுகாப்புக்கான செலவுகளை வழங்குவதற்கு தயாராக இருப்பதாகவும், தேவைக்கு ஏற்ப உரிய பணத்தை விடுவிக்க முடியும் என்றும் அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நிதி அமைச்சின் செயலாளர் திரு.மகிந்த சிறிவர்தன மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதுடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பண ஒதுக்கீடு உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

(அ)

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு நீதியமைச்சர் அவசர கடிதம்

கொழும்பு, ஜூலை 19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களைப் பிரயோகிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ எழுத்துமூல அறிவித்தல் விடுத்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலின் போது சட்டவிரோதமான செயல்கள், இலஞ்சம், கப்பம் பெறுதல் போன்ற சம்பவங்களுக்கு தற்போதைய விகிதாசார தேர்தல் முறையின் கீழ் சட்டம் செயலிழந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன்படி, தேர்தல் கலாசாரத்தை மாற்றி சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்ட ஜனநாயகத்துக்காக, தேர்தல் ஆணைக்குழுவின் பூரண ஆதரவுடன் 2023 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன் காரணமாக எதிர்வரும் தேர்தலுக்கு அந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் கலாநிதி விஜயதாச தெரிவித்தார். (அ)

# புங்குடுதீவில் பசுக்களை சட்டவிரோதமாக இறைச்சியாக்கும் செயல்பாடு அதிகரிப்பு!



யாழ்ப்பாணம், ஜூலை 19

புங்குடுதீவில், திருடர்களால், பசுக்கள் இறைச்சிக்காக வெட்டப்படுவதாகவும், இந்த விடயம் தொடர்பில், பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புங்குடுதீவு ஜே/22 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வரதீவு பகுதியில் அப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவகர் சிறீதரன் தலைமையிலான குழுவினர் பற்றைக் காட்டை சுற்றிவளைத்தபோது சட்டவிரோதமான முறையில், பசு ஒன்றை இறைச்சியாக்கிக் கொண்டிருந்த இருவர் தப்பியோடியுள்ளனர்.

குறித்த காட்டுப் பகுதியில் ஏற்கனவே பல கால்நடைகள் சட்டவிரோதமாக இறைச்சியாக்கப்பட்டமை தெரியவந்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாக, புங்குடுதீவில், கால்நடைகளை சட்டவிரோத இறைச்சியாக்கும் செயற்பாடுகள் வெகுவாக குறைந்திருந்த நிலையில், மீண்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் ஏற்படுவதாகவும், இது தொடர்பில் பொலிசார் கவனம் செலுத்தவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா குலனையூரில் சிறப்பாக நடைபெற்றது



யாழ்ப்பாணம், ஜூலை 19

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆடிப்பிறப்பு நாளைத் தமிழர் பண்பாட்டின் திருநாளாக நேற்று முன் தினம் புதன் கிழமை அராலி வடக்கு குலனையூரில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளது. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வாடிப்பிறப்பு விழா குலனையூர் கலைவாணி சனசமூக நிலையம், கலைவாணி விளையாட்டுக்கழகம் ஆகினயவற்றின் அனுசரணையுடன் ஞானவைரவர் ஆலய முன்றலில் இடம் பெற்றுள்ளது.

பிரதம விருந்தினராகக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வரும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் பொதுச்செயலாளருமான ச.லலீசன் கலந்து கொண்டிருந்தார். இவர்களோடு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன், பொருளாளர் க. கேதீஸ்வரநாதன், கலை இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை.சரவணன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

கலைவாணி சனசமூகநிலையத்தின் தலைவர் த.மதுசீலனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகி, கலைவாணி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் நே.சாத்வீகனின் நன்றியுரையுடன் நிறைவுற்ற இவ்விழாவில் குலனையூரின் ஏராளமான மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்களின் ஆற்றுகையில் கலை நிகழ்ச்சிகள் பலவும் இடம்பெற்றிருந்தன. அனைவருக்கும் ஆடிக் கூழும், கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டதோடு கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்களுக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

தமிழர்களுக்கே உரித்தான ஒரு பண்பாட்டு அடையாளமான ஆடிப்பிறப்பும் அது சார்ந்த கொண்டாட்டங்களும் தற்போது அருகி வந்துள்ளன. இந்நிலையில் மீளவும் அதனை வெகுசனமயப்படுத்தும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் கிராமமட்டத்தில் பொதுமக்களுடன் இணைந்து ஆடிப்பிறப்பைச் சிறப்பான முறையில் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விலை குறைப்புச் சலுகை வழங்காத வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 19

எரிபொருள், சமையல் எரிவாயு, மின்சாரம் போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளபோதிலும் நுகர்வோருக்கு சலுகைகளை வழங்காத வர்த்தகர்களை கண்டுபிடிக்க நுகர்வோர் அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர குறிப்பிட்டார்.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக சோதனைகளை மேற்கொள்ளுமாறும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மற்றும் காட்சிப்படுத்தப்பட்ட விலைகள் தொடர்பில் விசேட அவதானத்துடன் சோதனைகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

(அ)

# கடவுச்சீட்டு விண்ணப்ப முறையில் புதிய மாற்றம்

கொழும்பு, ஜூலை 19

கடவுச்சீட்டு விண்ணப்பதாரர்களின் வசதிக்காக புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, கடவுச்சீட்டை விண்ணப்பிப்பதற்கு www.immigration.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன் பதிவு செய்யப்படவேண்டும்.

ஒன்லைனில் பதிவு செய்ததன் பின்னர் முன்னுரிமை முறையின் படி கடவுச்சீட்டுகள் வழங்கப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான புதிய முறை இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# சட்டவிரோத மீன்பிடி காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 19

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் கடல் வாழ் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் கவலை தெரிவித்துள்ளது.

குறிப்பாக ஆமைகள் மற்றும் டொல்பின்கள் போன்ற பாலூட்டி விலங்குகளின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த ஒரு வாரத்தில் மட்டும் மேற்கு கடற்கரைப் பகுதியில் 10 இற்கும் மேற்பட்ட ஆமைகளின் உடல்களை வனவிலங்கு அதிகாரிகள் கண்டுபிடித் துள்ள [illegible] ளது.

இதேவேளை, சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் மீன்பிடித் துறையும், சுற்றுலாத் துறையும் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக வனஜீ வராசிகள் பாதுகாப்புத் திணைக் களத்தின் மேற்குப் பிராந்திய கால்நடை வைத்தியர் சுஹதா ஜயவர்தன குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

அந்த நேரத்தில் நிலவிய சிக்கல்களால் 22ஆவது திருத்தமாக நிறைவேற்றப்பட்டு 21ஆக உள்வாங்கப்பட்டது.

இந்தநிலையில் ஜனாதிபதியின் பதவிக்காலம் உட்பட பல்வேறு சிக்கல்களை தீர்க்கும் வகையில் 22ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான அனுமதி கடந்த அமைச்சரவையில் வழங்கப்பட்டது.

இதற்கு நாடு முழுவதும் பல்வேறு எதிர்ப்புகள் எழுந்தன. அத்துடன், 22ஆவது திருத்தச் சட்டத்தை இத்தருணத்தில் நிறைவேற்ற அரசாங்கம் முற்பட்டால் கடுமையான போராட்டங்களை சந்திக்க நேரிடும் என்று எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்திருந்தன.

எனினும், அடுத்த பாராளுமன்ற அமர்வில் இதனை சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகர்வுகளில் ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், 22ஆவது திருத்தச்சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட வேண்டாம் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சின் செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனது...

அண்மையில் அறிவித்திருந்தார்.

இதனிடையே, மைத்திரிபால சிறிசேன சுதந்திர கட்சியின் தலைவர் பதவியில் தொடர முடியாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதன் பின்னர், அவர் தலைமை பதவியை இராஜிநாமா செய்தார். தற்காலிக பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். எனினும், இதற்கும் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது.

விஜயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் அமைச்சராகத் தொடர்கின்றபோதிலும் அரசாங்கத்துக்கு எதிராக விமர்சனங்களையும் முன்வைத்து வருகிறார்.

இந்த நிலையிலேயே சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் தனது அமைச்சு பதவியை துறக்கிறார். இந்த மாத இறுதியில் அல்லது அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் அவர் தனது அமைச்சு பொறுப்பை துறைப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## புலிகளின்...

தெரிவிக்கையில்,

போரின் பின்னரும் சமூகத்தில் துப்பாக்கிகள் புழக்கத்தில் உள்ளன. இதுவே நாட்டின் பல்வேறு இடங்களிலும் இடம்பெறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களுக்குக் காரணம். போருக்கு பின்னர் விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் புழங்குகின்றன. இதனால், துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த முடியவில்லை - என்றார். (ஐ)

## இந்தியாவை...

ஊடகம் ஒன்று அவரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி,

இந்தியாவின் நியாயமான பாதுகாப்பு அக்கறைகளுக்குப் புறம்பான விதத்தில் இலங்கை மண்ணிலோ அல்லது கடற்பரப்பிலோ மூன்றாம் தரப்பு ஒன்று செயல்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

எமது அயலகத்தில் எந்தவொரு தரப்பினரும் எவ்விதமான போர் விளையாட்டுகளிலும் ஈடுபடுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

இருப்பினும், இந்தியா "பிரிக்ஸ்" போன்ற சில பொதுக் கட்டமைப்புக்களில் சீனாவுடன் இணைந்து பணியாற்றுவதைப் போன்று இலங்கையும் அதன் ஏனைய பங்காளிகளுடன் இணைந்து செயலாற்ற விரும்புகிறது - என்றும் கூறியிருக்கிறார். (ஐ)

## இலஞ்சம்...

இரண்டு லொறிகளில் மணல் ஏற்றிச் சென்றவர்களிடம் 43 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெற்றபோது யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு விசேட பொலிஸார் அவரை கைது செய்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்னர், மேலதிக விசாரணைக்காக பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் அழைத்து செல்லப்பட்டனர்.

கைதான பொலிஸ் உத்தியோகத்தர் முல்லைத்தீவை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஞானசாரர்...

சந்திப்பில் இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் வகையில் ஞானசார தேரர் கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பான வழக்கில் கடந்த மார்ச் 28ஆம் திகதி, பொதுபல சேனா அமைப்பின் பொது செயலாளர் கல கொடை அத்தே ஞானசார தேரருக்கு 4 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

இந்நிலையில், ஞானசார தேரர் சமர்ப்பித்த சீராய்வு மனுவை ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை பிணையில் செல்ல அனுமதித்தது. (ஐ)

## மருத்துவர்...

செயல்பட்டேன். அது மருத்துவத்துறை மாபியாக்களுக்கு பிடிக்கவில்லை. அதனால் என்னை இங்கிருந்து விரட்டுகின்றனர். ஆனால், இந்த மக்களின் அன்பு என்பது எனது இதயத் துடிப்பு. இந்த மண்ணில் இருந்து விடைபெறுகின்றேன்.

"எனது குரல்வளையை நசுக்கி எவரும் என்னை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. மக்களுக்கான எனது பணி எப்போதும் தொடரும். சுகாதார அமைச்சர் தலைமையிலான குழுவின் யாழ்ப்பாண வருகை ஒரு நிகழ்ச்சி நிரலுடன் கூடிய கண்துடைப்பு நாடகம் என்பது மட்டுமல்லாமல் ஏமாற்று வித்தையாகும். பழிவாங்கப்பட்ட நான் மீண்டும் சுகாதார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு பேராதனை மருத்துவமனைக்கு நியமிக்கப்படவுள்ளேன். இங்கிருந்து விடை பெறுகின்றேன். இன்று (நேற்று) கொழும்பு செல்கின்றேன். எல்லாம் முடிவடைந்த பின்னர் மீண்டும் இங்கு வருவேன். மக்களுக்கு நன்றி", என்றார். (ஐ)

## மீனவர்...

காணப்படும்.

கற்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரை கடல் அலையின் உயரம் சுமார் 2.0 - 2.5 மீற்றர் வரை உயர்வதற்கு வாய்ப்புள்ளது. இவ்வாறு உயரும் அலைகள் நிலத்தை நோக்கி வரக்கூடிய நிலை ஏதும் இல்லை.

எனவே, மீனவர் மற்றும் கடல்சார் சமூகத்தினர் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## சிறுவர்களின்...

சுருங்குவதால் சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்படுகிறது. புகை மூச்சுத்திணறல் அறிகுறிகளை மோசமாக்குவது மட்டுமல்லாது, மீண்டும் மீண்டும் சுவாச பிரச்னைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது.

சிறுவர்களுக்கு ஏற்படும் மூச்சுத் திணறலை குறைப்பதற்கு புகை அற்ற சூழலை உருவாக்குவது முக்கியமானது. இந்த நிலையில், நாள்பட்ட இருமல் மற்றும் தொடர்ந்து மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் பெற்றோர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் மருத்துவர் கூறியுள்ளார். (ஐ)



# ஜப்பானிய அபிவிருத்தி திட்டங்கள் மீளவும் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 19

கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால் கடந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் உட்பட, ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானிய பிரதிநிதிகளின் தலைவர் கலாநிதி இசும் ஹிரோட்டோ நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், கடன் மறுசீரமைப்பு செயல்பாட்டை மிகக் குறுகிய காலத்தினுள் நிறைவேற்றியிருப்பதன் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம்மீது சர்வதேச சமூகம் வைத்துள்ள நம்பிக்கை பிரதிபலிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். (ஐ)

# வெள்ளவத்தை விபத்தில் முதியவர் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூலை 19

கொழும்பு, வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பஸ் மோதி வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார் என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

மொறட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய வயோதிபரே உயிரிழந்தார்.

இவர் வீதியை கடக்க முற்படும் போது மொறட்டுவையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ் மோதியதில் உயிரிழந்தார்.

இதனையடுத்து பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வெள்ளவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால் இளைஞர்களே பாதிக்கப்படுவர்!

## ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது

கொழும்பு, ஜூலை 19

நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்தால் இளம் சந்ததியினரே அதிகம் பாதிக்கப்படப் போகின்றனர். அதற்கு இடமளிப்பதா என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும். அத்துடன், தேர்தலை பிற்போடுவதற்கு எங்களுக்கு எந்த தேவையும் இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடந்த சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டையே ரணில் விக்ரமசிங்க பொறுப்பெடுத்து, தற்போது மக்கள் ஓரளவு நிம்மதி மூச்சுவிட முடியுமான நிலைக்கு கொண்டுவந்துள்ளார். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அரசியல் அனுபவமில்லாத, சாதாரண செயலாளர் ஒருவரை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் பிரதிபலனே நாடு இந்த நிலைக்கு செல்ல பிரதான காரணமாகியது. அதனால் மீண்டும் பரீட்சித்துப் பார்க்க ஒருவரை மக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யுமானால் நாடு மீள கட்டியெழுப்ப முடியாத பாதாள நிலைக்கு தள்ளப்படும்.

அவ்வாறான நிலைக்கு நாடு தள்ளப்பட்டால் அதனால் அதிகம் பாதிக்கப்படப்போவது இளம் சந்ததியினராகும். வயது முதிர்ந்தவர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆனால், அவர்கள் அதன் பாதிப்பை குறுகிய காலத்துக்கே அனுபவிப்பார்கள். அதனால் நாடு மீண்டும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நிலையை விட மோசமான நிலைக்கு தள்ளப்படுவதற்கு இடமளிப்பதா என்பதை இளைஞர்கள் தீர்மானிக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்படட தேசிய மக்கள் சக்தி நாடு பூராகவும் மக்கள் பேரணிகளை நடத்தி, மக்களின் ஆதரவு தங்களுக்கு இருப்பதாக பிரசாரம் செய்துவர ஆரம்பித்தது. இதனை பார்த்துக்கொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியும் பிரசார கூட்டங்களை நடத்த ஆரம்பித்தது. இவர்கள் தங்களின் கூட்டங்களுக்கு தூர பிரதேசங்களில் இருந்து பஸ்களில் ஆட்களை அழைத்துவந்தே சனத்தைக் காட்டுகின்றனர். இதற்காக பாரியளவில் பணம் செலவழித்து வருகிறார்கள். ஆனால், ஐக்கிய தேசிய கட்சி தற்போதுதான் தேர்தல் பிரசார கூட்டம் நடத்த ஆரம்பித்திருக்கிறது.

கண்டியில் நாங்கள் நடத்திய கூட்டத்தில் பெரும் மக்கள் கூட்டம் வந்திருந்தது. இந்த கூட்டத்துடன் இவர்களின் கூட்டங்கள் பின்தள்ளப்பட்டுள்ளன. நாங்கள் அமைதியாக இருக்கும்போது இவர்கள் வீரர்கள் போன்று செயல்பட்டனர். நாங்கள் களத்துக்கு வந்ததுடன் இவர்களின் மக்கள் கூட்டம் செயலிழந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறப்போவது ரணில் விக்கிரமசிங்க. அப்படி இருக்கும்போது தேர்தல் பிற்போடப்பட்டால் எங்களுக்கே பாதிப்பு ஏற்படுகிறது. அதனால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தலுக்கான திகதியை அறிவிக்குமாறு நாங்கள் தேர்தல் ஆணையாளரை கேட்டுள்ளோம் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் பயன்பாட்டில்!

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 19

**பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதை முடிவுக்கு கொண்டுவருவதாக உறுதியளித்துள்ள போதிலும் இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தினை தாங்கள் எதிராளிகள் என கருதுபவர்கள் மற்றும் சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிராக பயன்படுத்துகின்றனர் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

இலங்கை அதிகாரிகள் தாங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதாரங்களை முன்வைக்காத போதிலும் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துகின்றனர் என மனித உரிமை கண்காணிப்பகம் கூறியுள்ளது.

கண்மூடித்தனமாக தடுத்து வைத்தல் மற்றும் சித்திரவதைகள் காரணமாக சிலர் பல வருட காலமாக பாதிக்கப்பட்டுள்ள அதே வேளை, சிலர் வழக்குகள் கைவிடப்பட்ட பின்னரும் ஒடுக்குமுறைகளை எதிர்கொள்கின்றனர் அது தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் எனப்படும் சட்டம் நபர்களை நீண்டகாலத்துக்கு அதிகாரிகளின் அனுமதியுடன் தடுத்துவைப்பதற்கான ஏற்பாடுகளை கொண்டுள்ளது. நீதிமன்றத்தின் கண்காணிப்பு இன்றி இதனை செய்யலாம் என குறிப்பிட்டுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், இந்த சட்டம் சித்திரவதைக்கு எதிரான போதிய பாதுகாப்பின்மைகளை கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

2022 இல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் ஆற்றிய உரையில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்துவதை நிறுத்துவதாக உறுதிமொழி வழங்கினார்,எனினும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் பரந்துபட்ட அளவில் பயன்படுத்தப்படுவதால் சிவில் சமூகம் அரசாங்க மட்டத்திலான ஊழல் குறித்து ஆராய முடியாத நிலையில் காணப்படுவதாக 2023 செப்ரெம்பரில் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்திருந்தது என குறிப்பிட்டுள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், பயங்கரவாத தடைச் சட்டத்தினால் ஏற்படும் அச்சநிலை அவ்வாறானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் விரிவான உள்நாட்டு பாதுகாப்பு கட்டமைப்பு இயந்திரம் அப்பாவி மக்களை குறிவைப்பதற்காகவும்,விமர்சனங்களில் ஈடுபடுபவர்களை மௌனமாக்குவதற்காகவும் சிறுபான்மை சமூகங்களை இழிவுபடுத்துவதற்காகவும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கைக்கு தப்ப முயன்ற பெண் உட்பட மூவர் கைது!

சென்னை, ஜூலை 19

இந்தியாவின் தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு தப்பி வர முயன்ற இலங்கை பெண் மற்றும் இலங்கைக்கு அழைத்து வர உதவிய இருவர் என மூவர் கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த விஜிதா (வயது-45) என்ற பெண் கடந்த 2023 டிசெம்பர் மாதம் விமானம் மூலமாக 6 மாத கால விசாவில் சென்னைக்குச் சென்று பாண்டிச்சேரியில் தங்கி மனநோய்க்கான சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில், விசா காலம் முடிவடைந்ததால் தனுஷ் கோடியில் இருந்து சட்டவிரோதமாக படகில் செல்ல தங்கச்சி மடத்தைச் சேர்ந்த ஜேசு என்பவரை அணுகி 50 ஆயிரம் ரூபா பணம் கொடுத்து நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ராமேஸ்வரம் மீன்பிடித்துறை முகத்திலிருந்து புறப்படத் தயாராக நின்ற விஜிதாவையும், இலங்கைக்கு சட்டவிரோதமாக தப்ப உதவிய தங்கச்சிமடத்தைச் சேர்ந்த அருளாந்தம் மற்றும் அவருடைய 17 வயது மகன் ஆகிய மூவரையும் ராமேஸ்வரம் துறைமுக பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரகலயவின் இலக்கை அடைய இதுவே வாய்ப்பு

## ரில்வின் சில்வா கருத்து

கொழும்பு, ஜூலை 19

அரகலய போராட்டத்தின் இலக்குகளை அடைவதற்கான முதல் வாய்ப்பு ஜனாதிபதித் தேர்தலே என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொல்லாத ஆட்சியாளர்களை விரட்டியடித்து தமக்கான சிறந்த அரசாங்கத்தை உருவாக்குவது அவசியமானது. அரகலய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தமது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்ற ஆவல் கொண்டுள்ளனர்.

ராஜபக்ச ஆட்சியை ஒழித்து புதிய மாற்றம் ஏற்படும் என அரகலய போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இலங்கை மக்கள் எதிர்பார்த்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் இலக்குகள் நிறைவேற்றப்படவில்லை.

அந்த மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கான முதல் சந்தர்ப்பம் இந்த ஜனாதிபதித் தேர்தல். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர விரும்புகிறார்கள்.

தீய ஆட்சியாளர்களை மாற்றி, தங்களுக்கான சிறந்த ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சிறப்பு வாய்ந்தது, ஏனெனில் பதவி விலகிச் சென்ற ஜனாதிபதிக்கு பின்னர் நடைபெறும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும் - என்றார். (அ)

# ஓமானில் பணி புரிந்து வரும் இலங்கையருக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19

ஓமானின் அல் - வாடி அல் - கபீர் பகுதியில் உள்ள பள்ளிவாசலுக்கு அருகில் நேற்று முன் தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பாகிஸ்தான் பிரஜைகள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் அதிகளவான இலங்கையர்கள் பணிபுரிந்து வருவதுவதுடன் அங்கு மோதல் நிலைமை மேலும் அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது.

இந்த நிலையில், அங்குள்ள இலங்கையர்களை குறித்த பகுதிக்குச் செல்ல வேண்டாம் என ஓமானுக்கான இலங்கைத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

அத்தோடு, அங்குள்ள இலங்கையர்களுடன் தொடர்பு கொள்ள முடியவில்லையாயின், ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் 24 69 78 410 என்ற இலக்கத்திற்கோ அல்லது ஓமான் பொலிஸாரின் 24 52 1885 என்ற இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளுமாறும் ஓமானுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. (அ)

# சிறுமியைக் கிணற்றில் வீசி தாயாரே கொலை செய்தார்!

## பொலிஸ் விசாரணையில் தகவல்

கொழும்பு, ஜூலை 19

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யட்டியாந் தோட்டை பிரதேசத்தில் உயிரிழந்த நான்கு வயதுச் சிறுமியை அவரது தாயாரே கிணற்றில் வீசிக் கொலை செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சிறுமி நேற்று முன்தினம் அவர் வசிக்கும் பகுதியிலுள்ள கிணறொன்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சிறுமியின் தாயாரே சிறுமியைக் கிணற்றில் வீசி கொலை செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுமியின் தாய் வாய் பேசமுடியாத பெண் என்பதுடன், சுகவீனமுற்றிருந்த நிலையில் கரவனெல்ல வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கணித ஆசிரியர் இடைநீக்கம்

கொழும்பு, ஜூலை 19

உயர்தர மாணவர்களுக்கு கணிதம் கற்பித்த ஆசிரியர் ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலைக்குச் சமூகமளிக்காது, உயர்தர வகுப்பு மாணவர் குழுவிற்கு பணத்துக்காக பிரத்தியேக வகுப்பை நடத்தினார் என்றக் குற்றச்சாட்டிலேயே அந்த ஆசிரியரை இடைநீக்கம் செய்துள்ளதாக வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன் தெரிவித்தார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர், அநுராதபுரம் பாடசாலையொன்றில் கற்பிப்பவர் என்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஆசிரியர், பாடசாலை நேரங்களில் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளில் பணத்திற்காக கற்பிப்பதாக பெற்றோர்கள் குழுவொன்று மாகாண கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அந்த முறைப்பாட்டின் பேரில், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய பணியாளர்கள் குழுவுடன் இணைந்து பாடசாலையை ஆய்வு செய்தபோது, இந்த ஆசிரியர், பாடசாலைக்குச் சென்று, ஆசிரியர்களின் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு பாடசாலைக்கு வெளியே சென்று பிரத்தியேக வகுப்பில் மாணவர்களுக்கு கற்பித்ததைக் கண்டுபிடித்தனர்.

இவ்வருடத்தில் இதுவரை எவ்வித அதிகார சபையின் அங்கீகாரமும் இன்றி இந்த ஆசிரியர் 26 நாட்கள் விடுமுறை எடுத்துள்ளதாகவும் மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# அமைச்சு பதவியை துறக்கவும் தயார்!

## பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஜூலை 19

அமைச்சுப் பதவிகளை விடவும், ஹோமாகம மக்களின் கௌரவமே தனக்குப் பெறுமதியானது என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலை திறப்புக்கு எதிராகவும் குடிதண்ணீர் நிலையங்களை திறக்கக் கோரியும் நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

நீண்ட காலமாக ஹோமாகம நகரை அண்மித்த பகுதியில் குடிதண்ணீர் நிலையங்களை ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படாமல் ஹோமாகம பிரதேச செயலாளர் தன்னிச்சையாக செயற்பட்டுள்ளதாகவும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் ஹோமாகம பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மதுபானச்சாலையை ஒரு வாரத்திற்குள் அகற்றாவிட்டால் கடும் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# திரையரங்கில் அலைபேசியை தடை செய்யுமாறு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 19

திரையரங்குகளில் அலைபேசிகள் தடை செய்யப்பட வேண்டும் என திரைப்பட இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் ஒரு திரைப்படத்தை சட்டவிரோதமாக பதிவு செய்து சமூக ஊடகங்களில் பதிவேற்றிய சம்பவத்தைத் தொடர்ந்து அவர்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் திரையரங்கு உரிமையாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என திரைப்பட இயக்குநர் ஜயந்த சந்திரசிறி தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனமும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ உத்தரவினை பிறப்பிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரபல இயக்குநரின்‘சிங்கபாகு’ திரைப்படத்தை சட்டவிரோதமாக பதிவு செய்து யூடியூப்பில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் கண்டியைச் சேர்ந்த 24 வயதுடைய நபர் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org